சிறப்பியல்பு பெற்ற நிதி நிறுவனங்களால் வழங்கப்பட்ட கடன்களின் மொத்தத் தொகை, 1964ல் ரூபாய் 35 இலட்சத்தால் உயர்ந்து, ரூபாய் 255 இலட்சமாக அமைந்தது. அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம், கமத்தொழில் கைத்தொழில் கொடுகடன் கூட்டுத்தாபனம், தேசிய ஈட்டு வங்கி, இலங்கை சேமிப்பு வங்கி ஆகியவை தாம் வழங்கிய கடன்களை அதிகரித்தன. ஆனால் தேசிய வீடமைப்புத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கடன்கள் பெருமளவு வீழ்ச்சியுற்றன மேலே குறிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு கொடுக்கப்பட்டு வெளிநின்ற மொத்தக்கடனை ஒப்பு நோக்குகையில், அது 1963ல் ரூபாய் 1333 இலட்சமாகச் விளங்கி, 1964ல் ரூபாய் 1412 இலட்சமாக உயர்ந்து விளங்கியது.

அட்டவணை II உ—20

## சேமிப்பு வைப்புக்களும் சேமநிதிப் பத்திரங்களும்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | மார்கழி 1963 | மார்கழி 1964 | மாற்றம் மார்கழி '63/ மார்கழி '64 |
|---|---|---|---|
| தபாற் கந்தோர் சேமிப்பு வங்கி .. | 375·5 | 393·4 * | + 19·9 * |
| இலங்கை சேமிப்பு வங்கி .. .. | 77·2 | 79·3 * | + 2·1 * |
| வர்த்தக வங்கிகள் (தவணை சேமிப்பு ஆகிய வைப்புக்கள்) * * .. .. | 499·2 | 551·1 | + 51·9 |
| சேமநிதிப் பத்திரங்கள் (நிலுவையில் உள்ளவை) .. .. | 34·4 | 37·4 | — 3·0 |
| மொத்தம் .. .. | 986·3 | 1061·2 * | + 74·9 * |

மூலம்: ஸ்ரீலங்கா மகா வங்கி.

* தற்காலிகமானவை.
* * அரசாங்க வைப்புக்களையும் உட்படுத்தும்.

தபால் நிலைய சேமிப்பு வங்கியினாலும், இலங்கை சேமிப்பு வங்கியினாலும் வழங்கப்பட்ட மொத்த சேமிப்புப் பத்திரங்களும், சேமிப்பு வைப்புக்களும், வர்த்தக வங்கிகளிடம் வைக்கப்பட்ட தவணை சேமிப்பு வைப்புகளும் ரூபாய் 749 இலட்சத்தால் அல்லது 7·6 சதவீதத்தால் 1964ல் அதிகரித்தது. சென்ற ஆண்டின் சேமிப்பு அதிகரிப்பு ரூபாய் 893 இலட்சமாக அல்லது 9·9 சதவீதமாக விளங்கியது. வர்த்தக வங்கிகளில் செய்யப்பட்ட தவணை சேமிப்பு வைப்புகள், ரூபாய் 519 இலட்சத்தால் உயர்ந்தன. மற்றும் தபால் நிலைய சேமிப்பு வங்கியில் சேர்க்கப்பட்ட வைப்புகள், ரூபாய் 179 இலட்சத்தால் உயர்ந்தன. ஊழியர் சேமநிதியினால் பெறப்பட்ட மொத்தத் தொகை ரூபாய் 609 இலட்சமாக 1964ல் விளங்கியது.

### (ஊ) மகா வங்கியின் தொழிற்பாடுகள்

மகா வங்கியின் சர்வதேச ஒதுக்கு நிதி மார்கழி 1963ல் ரூபாய் 1142 இலட்சமாயிருந்து, தை 1964ல் மிகவும் குறைந்த விலையாகிய ரூபாய் 690 இலட்சமாக கீழ் நோக்கி வீழ்ச்சியுற்றபின், மாசி 1964ல் ரூபாய் 1169 இலட்சமாக உயர்ந்தது. இந்த அதிகரிப்பு தபாற் கந்தோர் சேமிப்பு வங்கியில் இருந்து பெற்ற வெளிநாட்டுச் சொத்துக்களின் முகவரிப் பெறுமானமாகிய ரூபாய் 533 இலட்சத்தை பிரதிபலித்தது இவ்வங்கி, பதிலாக ஒத்த பெறுமதியுள்ள உள்நாட்டுச் சொத்துக்களை மகா வங்கியிடம் இருந்து பெற்றது. மீண்டும் சர்வதேச ஒதுக்குநிதி ரூபாய் 100 இலட்சமாக சித்திரையில் வீழ்ச்சியுற்று மிதமான திருத்தத்தைக் கடைசிக் காலாண்டில் காட்டியது. 1963ல் ஒதுக்குநிதி ரூபாய் 379 இலட்சத்தால் அல்லது 24·9 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றிருக்க மார்கழி 1964ல் ஒதுக்குநிதி ரூபாய் 1359 இலட்சமாக விளங்கியது. இது ரூபாய் 217 இலட்சம் அல்லது 19·0 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தது. 1963ல் வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூபாய் 416 இலட்சத்தால் அல்லது 8·2 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றிருக்க 1964ல் மொத்த வெளிநாட்டு சொத்துக்கள் ரூபாய் 1113 இலட்சத்தால் அல்லது 24·1 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றன.

விகிதாச்சார அடிப்படையில் மகா வங்கியின் மொத்த நாணயத்தையும் கேள்விப் பொறுப்புக்களையும் சர்வதேச ஒதுக்கு நிதியோடு ஒப்பிடுகையில் பின்னே குறிப்பிட்ட நிதி 1963ல் 9·3 சதவீதத்தில் இருந்து 10·4 சதவீதமாக 1964ல் திருந்தியது.

மகா வங்கியின் உள்நாட்டுச் சொத்துக்கள் ரூபாய் 1550 இலட்சத்தால் அல்லது 12·0 சதவீதத்தால் உயர்ந்து ரூபாய் 14492 இலட்சமாக விளங்கியது. 1963ல் இந்த அதிகரிப்பு ரூபாய் 1940 இலட்சமாக அல்லது 17·6 சதவீதமாகத் திகழ்ந்தது. இந்த அதிகரிப்பிற்குள் அரசாங்க, அரசாங்க உத்தரவாதம் பெற்ற பிணைகள் ரூபாய் 1232 இலட்சமாக விளங்கியது. ஒப்பு நோக்குகையில் மகா வங்கி தாங்கிய இப் பிணைகளின் தொகை 1963ல் 1[illegible]·8 சதவீதமாக விளங்கி 1964ல் 12·0 சதவீதமாக அமைந்திருந்தது. அரசாங்கத்திற்கு கொடுக்கப்பட்ட கடன்களும் முற்பணங்களும் ரூபாய் 68 இலட்சத்தால் உயர வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் ரூபாய் 188 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன.

மகா வங்கியின் மொத்த வைப்புப் பொறுப்புக்கள் ரூபாய் 471 இலட்சத்தால் 1964ல் உயர்ந்தன. இப்பெருமளவு அதிகரிப்பு வர்த்தக வங்கிகளில் செய்யப்பட்ட வைப்புக்களின் அதிகரிப்பைக் காட்டுகிறது. பின்னையது ரூபாய் 394 இலட்சமாக விளங்கியது.

மகா வங்கி வெளியிட்ட நாணய வெளியீடு 1963ல் ரூபாய் 1115 இலட்சமாக அல்லது 14·1 சதவீதமாக அதிகரித்திருக்க 1964ல் இவ்வதிகரிப்பு ரூபாய் 31·2 இலட்சமாக அல்லது 3·1 சதவீதமாக மட்டும் விளங்கியது. வங்கிகளும் தனியார் துறையும் கைவசம் வைத்திருந்த நாணயம் முறையே ரூபாய் 72 இலட்சமாகவும் ரூபாய் 246 இலட்சமாகவும் அதிகரிக்க அரசாங்கத்தின் கைவசம் இருந்த நாணயம் ரூபாய் 6 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றது.

## கொடுகடன் கொள்கை

தனியார் துறைக்கு வங்கி வழங்கிய மொத்தக் கொடுகடன் 1963ல் ரூபாய் 1369 இலட்சத்தால் அதிகரித்திருக்க 1964ல் இது ரூபாய் 920 இலட்சத்தால் அதிகரித்தது. இறக்குமதிக் கட்டுப்பாடு வழி முறைகள் 1963லும் 1964லும் அதிகரிக்கப்பட்டு விரிவு படுத்தப்பட்டதால் வங்கிக் கொடுகடனின் தொடர்ந்த அதிகரிப்பு அளவு கடந்த பணவீக்க அமுக்கச் சூழ்நிலையை பொருளாதாரத்தில் உருவாக்கக் கூடும். ஒரு புறத்தில் இச்சூழ்நிலையில் ஏற்படக்கூடிய அளவு கடந்த நாணயக் கேள்வியின் அதிகரிப்பை மகா வங்கி கவனத்திற்கு எடுக்கவேண்டியிருக்கிறது. இந்நாணயக் கேள்வியின் நிலை பொருட்களை பதுக்கி வைத்து நிலை உயரக் கூடுமென ஊகிக்கும் மனப்போக்கினாலும் வங்கிக் கொடுகடனின் தொடர்ச்சியான அதிகரிப்பினாலும் மோசமாகக் கூடியதாம். மறுபுறத்தில் குறிப்பாக கைத்தொழில் சார்பான உற்பத்தியின் விரிவுப் போக்கை தடைசெய்ய மகா வங்கி விரும்பவில்லை. அத்தோடு அரசாங்கம் அதிகரித்துவரும் தன் செலவுகளுக்கு வங்கித் தொழில் முறையினால் அளிக்கப்படும் கொடுகடனில் முன்னிலும் குறைந்தளவு தங்கியிருக்க வேண்டும் என்ற அதனின் தொடர்ந்த முயற்சியையும் மகா வங்கி தன் கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது.

மகா வங்கியின் கொடுகடன் கொள்கை மேலே குறித்த பண்புகள் அனைத்தையும் பிரதிபலிக்கவேண்டி இருந்து. வங்கியின் முற்பணங்கள் அதிகரிக்கும் போக்கினைக் காட்டிலும் நுகர்ச்சிக்கோ அவசியமற்ற தேவைகளுக்கோ ஆன முற்பண அதிகரிப்பிற்குரிய நேரடிச் சான்று இருக்கவில்லை. வர்த்தக வங்கிகளால் 1964ல் வழங்கப்பட்ட மொத்த அதிகரித்த கடன்கள் மேலதிகப் பற்றுகிய ரூபாய் 1068 இலட்சத்தில் ரூபா 226 இலட்சம் அரசாங்கக் கூட்டுத் தாபனங்களுக்கு வழங்கப்

---

1. மகா வங்கிக்கு அரசாங்கம் கொடுக்க வேண்டிய கடன். (கடன், முற்பணங்கள், முதலீடுகள்) 1962ல் ரூபாய் 1789 இலட்சத்தாலும். 1963ல் ரூபாய் 1465 இலட்சத்தாலும், 1964ல் ரூபாய் 1304 இலட்சத்தாலும் அதிகரித்தன. வர்த்தக வங்கிகளுக்கு அரசாங்கம் கொடுக்க வேண்டிய கடன் 1962லும் 1963லும் முறையே ரூபாய் 714 இலட்சத்தாலும் ரூபாய் 203 இலட்சத்தாலும் அதிகரிக்க 1964ல் அது ரூபாய் 254 இலட்சத்தால் குறைந்தது.
2. இங்கு கொடுகடன் நிறுவனங்கள் என்று குறிப்பது நாணய அதிகாரச் சட்ட உள்விதி (1) பிரிவு 127 ஆல் வரையறை செய்யப்பட்ட எந்த வங்கி நிறுவனமும் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் உட்பட அடங்கும்.
3. நாணயச் சபையால் காலத்திற்குக் காலம் வரையறை செய்யப்படும் கைத்தொழில், கமத்தொழில், வணிகம், வர்த்தகம் அல்லது வியாபாரம், அபிவிருத்தி அனைத்தும் உற்பத்தி நோக்குகளுள் அடங்கும்.

பட்ட அதிகரித்த தொகையையும் ரூபாய் 257 இலட்சம் கூட்டுறவு நிறுவன்ன களுக்கு கடனுக வழங்கப்பட்ட அதிகரித்த தொகையையும் ரூபாய் 585 இலட்சம் தனியார் வணிகத்திற்கும் தனிப்பட்டோர்க்கும் வழங்கப்பட்ட அதிகரித்த கடனே யும் எடுத்துக் காட்டுகிறது. பணவீக்க அமுக்க சூழ்நிலையில் கைவசமுள்ள இருப்புக் களை நிதி ஈடு செய்ய கடன் கேட்பதில் அதிகரிப்பு தென்படக்கூடும். எதிர்பார்ப்பு நோக்கங்களுக்காக கையிருப்புகளுக்கு செய்யப்பட்ட நிதியீட்டம் எவ்வளவு தூரம் 1964ல் முழுமைக் கடனில் விரிவுக்கு காரணமாய் இருந்ததென்று மதிப்பிடுதல் கடி னம். ஏனைய தேவைகள், என்ற தேவைகளின்படி பாகுபடுத்தப்பட்ட பகுப்புக் களின் கீழ்வரும் முற்பணங்களின் அதிகரிப்பும் பிணைகளின்படி பாகுபடுத்தப்பட்ட பகுப்பின் கீழ்வரும் பிணையில்லா முற்பணங்கள் வர்த்தக கையிருப்பிற்கு எதி ரான முற்பணங்கள் ஆகிய இரண்டின் அதிகரிப்பும் எதிர்பார்த்தபின் நோக்கங் களுக்கான கொடுகடனின் அதிகரிப்பை எடுத்துக் காட்டக்கூடும். கொடு கடன் விரிவு பற்றி விரிவான ஆராய்ச்சி மகா வங்கியால் செய்யப்படவிருப்பதால், புதிதாகக் கொடுகடன் தொகைக் கட்டுப்பாட்டு வழிமுறைகளே அது விதிக்க வில்லை. முன்பு கொண்டுவரப்பட்ட கொடுகடன் கட்டுப்பாட்டு வழிமுறைகள் தொடர்ந்து நடைமுறையில் இருந்தன. மேலும் வர்த்தக வங்கிகளின் கொடு கடனே அவசியமற்ற தேவைகளுக்குப் பயன் படுத்தாது உற்பத்திகளுக்கு வழி படுத்தத் தார்மீகத் தூண்டுகோலும் துணைசெய்தது.

**வங்கித் தொழில் வளர்ச்சி**

நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதி மகா வங்கியின் பொது ஒதுக்கு நிதியில் இருந்து ரூபாய் 100 இலட்சம் மாற்றப்பட்டு 1964ல் ஆடி மாதத்தில் நிறுவப்பட் டது. உற்பத்தித் தேவைகளுக்கு கடன் நிறுவனங்கள் கடன் கொடுப்பதை அந் நிறுவனங்களிற்கு திருப்பி நிதியீட்டம் செய்யும் வாய்ப்புகளே அளிப்பதன் மூலம் ஊக்குவிப்பதே இதனின் நோக்கம். எனினும் இந்நிதி 1964ம் ஆண்டு முடிவு வரை திருப்பி நிதி ஈட்டுவதற்கான விண்ணப்பங்களேப் பெறவில்லை. இதற்கு பல கார ணங்கள் இருக்கலாம். முதலாவதாக மூலப் பொருட்களேயும் மூலதனப் பொருட் களேயும் செய்வதில் ஏற்பட்ட கட்டுப்பாடுகளும், நீண்ட கால அடிப்படையில் கடன் பெறும் கேள்வியைக் குறைத்துள்ளது போலும். இரண்டாவதாக, வர்த்தக வங்கி களே தமது திருந்திய திரவத் தன்மை காரணமாக எழக்கூடிய எக் கேள்வியையும் ஏற்கத்தக்க ஒரு நிலேயிலும் இருந்திருக்கலாம். அத்துடன் இத்திட்டம் இவ்வருடத் தில் நடைமுறையில் இருந்தது குறுகிய காலப்பகுதி என்ற காரணமும், இத்திட்டத் தின் ஒப்பியல்பின் புதுமைத் தன்மையும், குறிப்பிடத்தக்க காரணங்களாய் இருக்க லாம்.

கொடுகடன் காப்புறுதி திட்டத்தை உருவாக்குவதைப் பற்றி மகா வங்கி ஆராய்ந்ததோடு ஒரு குறுகிய அளவுடைய திட்டத்தையும் உருவாக்கிக் கொண் டிருக்கிறது. வர்த்தக வங்கிகளின் கூட்டுறவோடு மகா வங்கியினுல் நடாத்தப்பட்ட முந்திய பயிற்சி நிகழ்ச்சியின் ஊடாக வளர்ந்த வங்கியாளர் பயிற்சி நிலேயம் மகா வங்கி, 1964ல் புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்ட பின்பு விரிவு செய்யப்பட்டது. 1964ம் ஆண்டு மார்கழி மாதம் முடிவில் இந்நிறுவனத்தில் 900 மாணவர்கள் பதியப் பட்டிருந்தனர். இந்த நிறுவனம் மக்கள் வங்கியில் புதிதாகச் சேர்ந்த ஊழியர் களுக்கு குறுகியகால விசேட பயிற்சி அளித்தது.

## (எ) அரசாங்க நிதி

**1963—'64ம் நிதியாண்டு**

ஐப்பசி 1963 முதல் புரட்டாதி 1964 வரையுள்ள நிதியாண்டிற்கான இலங்கை அரசாங்கத்தின் கணக்குகளே முந்தைய வருடங்களுக்குள்ள கணக்கு விபரங்களுடன் ஒப்பிட்டு அட்டவணே II எ—1 சுருக்கமாக காட்டுகின்றது. அவ்வட்டவணையிற் காட்டப்பட்டுள்ளவாறு, வரவு செலவுத் திட்ட இயக்கங்களின் முக்கியமான அம் சங்கள் பின்வருமாறு: